நாள்.13.02.2025

**அசல் வழக்கு எண். 39/2016**

பி.**வா.சா.2 – வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு கோவில் பரக்கலக்கோட்டையில் உள்ள அருள்மிகு பொதுஉடையார் மத்தியபுரிஸ்வரர் என்றால் சரிதான். இதன் உபகோவில் 2 உள்ளது அது என்னவென்று தெரியுமா என்றால் பிள்ளையார் கோவில், பெத்தபெருமாள் கோவில். உபகோவில் நகாநாதசுவாதி திருக்கோவில், காலடிகாத்தவராயன் கோவில் என்றால் சரிதான். தாவா கோவிலில் பொங்கல் அன்று மட்டும்தான் பகல் தரிசனம் என்றால் சரிதான். மற்ற நாட்களில் திங்கள் கிழமை மட்டும் நள்ளிரவு 12 மணிக்கு நடைதிறந்து பூஜை நடைபெறும் என்றால் சரிதான். கடைசி தமிழ்மாத கார்த்திகை சோமவாரம் மட்டும்தான் வெகுவிமர்சையாக நடைபெறும் என்றால் சரிதான். அந்த நாட்களில் லட்சகணக்கில் மக்கள் வருவார்கள் என்றால் சரிதான். தாவாகோவிலில் 2 பரம்பர அறங்காவலர்கள் மற்றும் ஒரு நிர்வாக அதிகாரியை கொண்டு நிர்வாகம் செய்யப்படுகிறது என்றால் சரிதான். தாவா கோவில் சம்பந்தமாக எந்த ஒரு முடிவு என்றால் மேற்படி 3 பேரும் ஒப்புதல் அளித்து தீர்மாணம் செய்வார்கள் என்றால் சரிதான். இதில் யாராவது ஒரு நபர் ஒப்புதல் அளிக்கவில்லை என்றால் எந்த முடிவும் எடுக்க முடியாது என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் 4ம் பிரதிவாதி சடகோபராமனுஜம் மற்றும் 5ம் பிரதிவாதி S.R ராமனுஜம் பரம்பரை அறங்காவலர்கள் என்றால் சரிதான். மேற்படி 2 பேரும் இறந்துவிட்டதால் அவர்களுக்கு பிறகு முறையே 8ம் பிரதிவாதி ராதாவும், 7ம் பிரதிவாதி முரளியும் பரம்பரை அறங்காவலராக உள்ளார்கள் என்றால் சரிதான். எனக்கு பூர்விகம் பரக்கலக்கோட்டை கிராமம். வாதி மாரியப்பனுக்கு பூர்விகம் பரக்கலக்கோட்டை கிராமம் என்றால் சரிதான். தாவா கோவிலில் வழிபாட்டுதாரர் என்பதை தவிற வேறு எந்த உரிமையும் இல்லை என்றால் சரிதான். வாதி மாரியப்பன் வழிபாட்டுதாரர் என்ற முறையில் கோவிலில் அக்கரை கொண்டவர் என்றால் தெரியாது. 4ம் பிரதிவாதி சடகோபராமனுஜம் கோவில் நிர்வாகத்திற்கு சொந்தமான சில சொத்துக்களை விற்பனை செய்ய முற்பட்டதால் வாதி அசல் வழக்கு எண்.345/1992 என்ற வழக்கை தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு வாதிக்கு ஆதரவாக தீர்ப்பான விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வழக்கு போலதான் இந்த வழக்கையும் வாதி நடத்திவருகிற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. கோவில் நலனுக்கா வேறு யாரேனும் நல்ல காரியம் செய்துவரும் விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பரம்பரை அறங்காவலர் மற்றும் கோவில் நிர்வாகியை தவிற வேறு யாரும் கோவில் நிர்வாகத்தில் முடிவு எடுக்க முடியாது என்றால் சரிதான். நான் தாவா கோவிலில் எந்த காலத்திலும் பொறுப்பில் இல்லை தற்போதும் இல்லை என்றால் சரிதான். தாவா கோவிலின் வரவு செலவு மற்றும் நிர்வாகத்தில் எனக்கு தலையீட உரிமை இல்லை என்றால் சரிதான். தாவா கோவில் சார்பாக அன்னதானம் செய்ய நான் பொதுமக்களிடம் வசூல் செய்து

அன்னதானம் செய்கிறேன் என்றால் நான் வசூல் செய்யவில்லை விரும்பி கொடுக்கம் மக்களிடமிருந்து அன்னதானம் செய்கிறேன். என்னை தேடி விரும்பி மக்கள் வந்து என்னிடம் பணம் கொடுக்க என்ன காரணம் என்றால் நான் 25 வருடமாக அன்னதான பொறுப்பில் இருந்துவருகிறேன். அன்னதான பொறுப்பில் நான் இருப்பதற்கு கோவில் நிர்வாகத்திடம் அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. யார் சொல்லி நான் அன்னதானத்திற்கு வசூல் செய்கிறேன் என்றால் நான் மற்றும் 10 நபர்கள் ஒன்றாக முடிவு செய்து பசியாக வரும் மக்களுக்கு அன்னதானம் செய்கிறேன். மேற்படி 10 நபர்கள் யார் என்று பதில் உரையிலோ, நிர்பணவாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி 10 நபர்களுக்கு கோவில் நிர்வாக அதிகாரம் வழங்கியுள்ளதா என்றால் இல்லை. நான் வசூல் பன்னும் தொகை பல லட்சங்கள் என்றால் சரிதான். அந்த வசூல் பணத்தை நான் தான் வரவு செலவு செய்கிறேன் என்றால் ஆமாம். அவ்வாறு வசூல் செய்வதற்கு வசூல் புத்தகம் உள்ளதா என்றால் இல்லை. 25 வருடமாக நான் வசூல் செய்வதற்கு பதிவேடு வைத்துள்ளேனா என்றால் இல்லை. வசூல் புத்தகம், பதிவேடு வைக்காததற்க காரணம் உள்ளதா என்றால் இல்லை. நோட் புக்கில் எழுதுவோம். அந்த நோட்டு புத்தகத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வரவு செலவு கணக்கு நான் சொல்வதுதான் என்றால் சாதான். அன்னதானம் செய்ததுபோக மீதம் உள்ள தொகையை நான் தான் வைத்துள்ளேன் என்றால் ஆமாம். மீதமுள்ள தொகையும் என்னிடம் லட்சகணக்கில் இருக்கும் என்றால் சரிதான். மீதி உள்ள தொகை எந்த வகையில் வைத்துள்ளேன் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வசூல் செய்ய கோவில்படம் போட்டு பத்திரிக்கை அடித்து கொடுப்பேனா என்றால் இல்லை.

**வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதின்பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.